**கந்தகெட்டிய பிரதேச சபை -2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கந்தகெட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, தேறிய சொத்துக்கள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கந்தகெட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 151,360 ஆக இருந்த போதிலும் அது ரூபா 193,615 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள இருப்பின் பெறுமதி ரூபா 226,199 ஆக இருந்த போதிலும் அது ரூபா 38,509 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட பகல் காப்பக நிலைய கட்டடத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 3,147,023 ஆக இருந்த போதிலும் ஆண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சேர்த்தல்களின் கீழ் அப்பெறுமதி ரூபா 6,615,911 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை விதி 218 | மீளாய்வாண்டிற்காக சகல காணி மற்றும் கட்டிடங்கள் பரிசோதனை சபை ஒன்றின் மூலம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பதவியணியினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வருடாந்தம் காணிகள் மெய்மையாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) | விநியோகிக்கப்பட்ட கழிவுப் பொருள்களை எரித்தல்/ அகற்றுவதற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 805,328 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,193,235 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 3,008,740 | 3,415,531 | 2,791,518 | 624,013 | 2,948,740 | 3,949,667 | 2,412,220 | 1,537,447 |
| (ii) | வாடகை | 3,968,520 | 5,164,316 | 3,294,130 | 1,870,186 | 3,949,200 | 3,545,799 | 2,479,231 | 1,066,568 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 594,600 | 905,760 | 905,760 | 0 | 595,000 | 498,990 | 498,990 | இல்லை |
| (iv) | ஏனைய வருமானம் | 7,206,380 | 6,684,265 | 5,634,092 | 1,050,173 | 1,969,550 | 3,797,650 | 4,526,474 | (728,824) |
| | மொத்தம் | 14,778,240 | 16,169,872 | 12,625,500 | 3,544,372 | 9,462,490 | 11,792,106 | 9,916,915 | 1,875,191 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரதரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 965,644 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 57,265 என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப் பணத்தில் ரூபா 27,265 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற செலவினக் கடன்கொடுத்தோர் ரூபா 2,451,570 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 1,067,908 என்பன மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைத்திருக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்துவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் 2019 ஆகஸ்ட் முதல் 2020 நவம்பர் வரையான காலத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு பணம் குறித்துரைத்த திகதியில் செலுத்தாமையின் காரணமாக சபையின் நிதியத்திலிருந்து ரூபா 87,784 மிகைக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | இந்த மிகைக் கட்டணப் பணம் சபை நிதியத்தில் இருந்து செலுத்த முடியுமா என உள்ளூராட்சி ஆணையாளரிடம் எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. | குறித்துரைத்த பிரகாரம் அரச ஊழியர் சேமலாப நிதியம் செலுத்துதல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குரியதாகக் காணப்பட்ட கந்தக்கெட்டிய நாற்சந்தியில் 12 பேர்ச் காணியில் அமைந்துள்ள 05 கடைகள் பிரதேசத்தின் வியாபாரி ஒருவரினால் அனுமதியற்ற வகையில் உரிமை கோரப்பட்டிருந்ததுடன் 1995 ஆம் ஆண்டின் போது சபை அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்திருந்தது. அதிலிருந்து வியாபாரியை அகற்றுமாறு நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 1996 ஆம் ஆண்டின் போது சபையினால் கடையின் உரித்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் நீதிமன்ற நடவடிக்கைகளின் பிரகாரம் செயற்படாமல் உரிய தரப்பினர் சபைக்கு எந்தவொரு தொகையும் செலுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வியாபார நடவடிக்கையை செய்து கொண்டிருந்தார். | இது தொடர்பாக சகல கோவைகளும் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. | நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற 25 தொன்னுக்கு அண்ணளவான உக்கும் மற்றும் உக்காத கழிவுகள் வேறு பிரிக்கப்படாமல் ஒன்றுசேர்க்கப்பட்டு புத்தங்கோட்டே பிரதேசத்தில் அமைந்துள்ள மகாவலி வன ஒதுக்கப்பகுதியில் தற்போது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் முறையற்ற வகையில் அகற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக காட்டு யானைகளின் அச்சுறுத்தல் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தோன்றியிருந்தது. | கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு இடமொன்று தொடர்பாக மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் பொருத்தமான இடமொன்று கிடைக்கப்பெற்றவுடன் முறையான பிரகாரம் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பிரகாரம் கழிவுப் பொருட்கள் அகற்றப்படல் வேண்டும். |